சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 13.07.2021 | supeedsam.com | supeedsam@gmail.com

காரைதீவு கிராமத்தின் இருப்பு கபளீகரம் செய்யப்படுகிறது
கார்ப்பட் வீதியை உடனடியாக நிறுத்துங்கள்!
ஜனாதிபதியிடம் வேண்டுகோள்!

(வி.ரி.சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த பழம்பெரும் காரைதீவு தமிழ்க்கிராமத்தின் இருப்பை கபளீகரம் செய்யும், மாவடிப்பள்ளி - கல்முனை வயலோர கார்ப்பட் வீதியை உடனடியாக நிறுத்துங்கள் என காரைதீவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், பொது அமைப்புகள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பில் இராணுவப் பயிற்சிகள் நடைபெறவுள்ள மேய்ச்சல் தரை பிரதேசத்தினை பார்வையிட தீர்மானம்

(சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவப் பயிற்சிகள் நடைபெறவுள்ள பண்ணை விலங்குகளின் மேய்ச்சல் தரை பிரதேசத்தினை சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகள், இராணுவத்தினர் மற்றும் பண்ணையாளர்கள் இணைந்து நேரடியாக பார்வையிடுவதன் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என முடிவு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கார்மலை, வெள்ளைக்கல், புலியடிபொத்தானை,

02 ஆம் பக்கத்தில்...

நாளை முதல் மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து

(காந்தன்)

மட்டுப்படுத்தப்பட்ட மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து சேவைகள் எதிர்வரும் புதன் கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியவசிய தேவைகளுக்கு பயணிப்பவர்களுக்காக இவ்வாறு பொதுப் போக்குவர்த்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

சம்பந்தனை நீக்கும் எண்ணம் இல்லை

(ஊர்காவலன்)

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தனை கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து நீக்குவதற்கான முயற்சிகள் எவையும் இடம்பெறவில்லை என கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த அரசியல்வாதியொருவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை கைப்பற்ற முயல்கின்றார் என நான் தெரிவிக்கவில்லை என மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நான் அன்று இந்திய தூதுவரை சந்திப்பதற்காக கொழும்பிலிருந்தேன். அவ்வாறான நிலையில் நான் எப்படி யாழ்ப்பாணத்தில் கருத்து தெரிவிக்க முடியும்

02 ஆம் பக்கத்தில்...

பாடசாலைகள் மீண்டும் அடுத்த மாதம் திறக்கப்படுகிறது

(காந்தன்)

ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்திய பின்னர் பாடசாலைகளைத் திறப்பதற்கு ஒகஸ்ட் மாதத்தில் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

MULTI CONSULTING
Versicherung & Finanz

சமூக அக்கறை எமது இலக்கு

குறைந்த வட்டி வீதத்தில்
வங்கிக்கடன், வீட்டுக்கடன்

Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch

கிழக்கில் 300 ஐ தாண்டிய கொரோனா மரணங்கள்!
கல்முனை பிராந்தியம் தடுப்பூசியிலிருந்து தொடர்ந்து புறக்கணிப்பு?

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தீநுண்மியின் தாக்கத்திகனால் உயிடழந்தவர்களின் எண்ணிக்கை 300ஐத் தாண்டியுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவை த்திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று (12) திங்கட்கிழமை வரை 301 பேர் கொரோனாவிற்குப் பலியாகியுள்ளனர்.இவர்களில் 275 பேர் மூன்றாவது அலையில்

02 ஆம் பக்கத்தில்...

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

அறிவாலயம்

அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.

ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்

ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலத்தில் 19 பேருக்கு கோரோனா

(சுபீட்சம் நிருபர்)

களுதாவளை, திருஞான சம்பந்தர் குருகுலத்தில் 19 பேர் கொரோனா தொற்றக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை களுதாவளை திருஞான சம்பந்தர் குருலத்திலுள்ள ஏழு மாணவர்கள் காய்ச்சல் காரணமாக

02 ஆம் பக்கத்தில்...

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598 25605: cicero

கந்தளாயில் பிறந்த சிசு கொலை பெண்ணொருவர் கைது

(முபாரக்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிறந்த சிசுவொன்றினை கொலை செய்து எறித்த குற்றச்சாட்டின் பேரில் சிசுவின்

02 ஆம் பக்கத்தில்...

சுவிஸ்ட்ஸர்லாந்து லுற்சேன் பரததர்சனா வாழ்வாதார உதவி நிறுவனத்தின் ஊடாக சுவிஸ் இளம் பெண் மருத்துவர் ஒருவர் தனது முதல் மாதச் சம்பளத்தின் ஊடாக கிடைக்கப் பெற்ற ஒரு தொகைப்பணத்தில் அக்கரைப்பற்றில் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு நிவி காய்கனி பெட்டகம் என்ற பெயரில் வாழ்வாதார உதவி செய்திருந்த நிலையில், சிறு தொழில் முயற்சிக்கான மரக்கறி கடை நேற்று திறந்து வைத்தபோது....

கந்தளாயில் பிறந்த சிசு கொலை

தாயொருவரை நேற்று மாலை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மத்ரஸாநகர் பேராறு கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரை கைது செய்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணின் கணவர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிறந்த சிசு பெண் குழந்தையெனவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வேறு ஒரு நபருடன் உள்ள தகாத உறவு மூலம் நேற்றிரவு(11) சிசு பிறந்துள்ளதாகவும்,பிறந்த சிசுவினை கொலை செய்து எறித்துள்ள நிலையில் அதனை தெருநாய்கள் கவ்விச் சென்ற நிலையில் அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் சிசுவினை பிரசவித்த பெண்ணைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார்

தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நாளை முதல் மாகாணங்களுக்கு

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புகையிரத சேவைகளும் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனை நீக்கும் எண்ணம் இல்லை

என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் சம்பந்தனின் தலைமைத்துவம் தலைமை குறித்து திருப்தியடைந்துள்ளன என தெரிவித்துள்ள மாவை சேனாதிராசா கூட்டணியில் உள்ள எவருக்கும் கட்சியின் தலைமை குறித்து அதிருப்தியில்லை என தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் உள்ள அல்லது வெளியிலிருந்து எவராவது பிரச்சினையை உருவாக்க முயல்கின்றார்களா என்ற கேள்விக்கு எவரும் இல்லை என மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மீண்டும் அடுத்த மாதம்

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு பிராந்தியத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்றும் நாளையும் தடுப்பூசி போடப்படும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டில் 242,000 ஆசிரியர்கள் உள்ளனர் என்றும் அவர்களில் பெரும்பாலோருக்கு ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முன்னெடுத்த போராட்டத்தில் இடம்பெற்றகைது நடவடிக்கை காரணமாக ஒன்லைன் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர் என்றும் ஊடகவியலாளர் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், சில ஆசிரியர்கள் மட்டுமே இன்று கற்பிப்பிலிருந்து விலக நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் இருப்பினும், ஒன்லைன் கல்வியைத் தொடரவேண்டும் என்றாலும் அது நிரந்தர தீர்வு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலத்தில் 19 பேருக்கு

அருகிலுள்ள களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக சென்றுள்ளனர்.இந்நிலையில் அங்கு அம் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் குறித்த ஏழு மாணவர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிராந்திய சுகாதாரப்பணிமனையினால் குருகுலத்திலுள்ள ஏனைய மாணவர்களுக்கும், குருகுல பராமரிப்பாளர்களுக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள அன்டிஜன் பரிசோதனையில் மேலும் 12 பேர் தொற்றுக்குள்ளாகி இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது.

காரைதீவு கிராமத்தின் இருப்பை கபளீகரம் செய்யப்படுகிறது

ஜனாதிபதி தொடக்கம் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அதிகாரிகள் வரை இதற்கான எதிர்ப்பு மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அமைப்புகளின்பிரதிநிதிகள்தெரிவித்துள்ளனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாடு காரைதீவு விபுலாநந்தர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவர் இரா.குணசிங்கம் ,செயலாளர் சி.நந்தேஸ்வரன் ,காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அவர்கள் கூறுகையில்:

காரைதீவின் மேற்கேயுள்ள நன்செய் நிலப்பிரதேசத்தில் இன்றைய கொரோனா காலகட்டத்தில், யாருக்கும் தெரியாமல் அவசர அவசரமாக முன்னெடுக்கப்படும் கார்ப்பட்வீதியையிட்டு காரைதீவு மக்கள் அதிர்வடைந்து கொதித்தநிலையிலுள்ளனர்.

சௌபாக்ய திட்டத்தின்கீழ் 1லட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்திசெய்யும் வேலைத்திட்டத்தின்கீழ்,காரைதீவு எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளியிலிருந்து வயல் பிரதேசத்தினூடாக கல்முனை வரையுள்ள 5கிலோமீற்றர் நீள அணைக்கட்டு வீதியை கார்ப்பட் வீதியாக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இங்குள்ள 900ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்படையவுள்ளன.

காரைதீவு மேற்குப்பிரதேச வயல் காணிகளுக்குத் தேவையான தண்ணீர் பெறும் வசதிகொண்ட இந் நன்செய் நிலப்பிரதேசம் இவ்வாறு கார்ப்பட்வீதிக்காக பயன்படுத்தப்பட்டால், எதிர்காலத்தில் விவசாயிகள் பாதிப்படைவதோடு ஊருணியில் வெள்ளம் தேங்கி ,கிராமத்திற்கு பாரிய வெள்ளஅபாயத்தை தோற்றுவிக்கும் துரதிஸ்டநிலை உருவாகும் . பிரதானவீதி சிறப்பாக இருக்கும்போது ,குடிமனைகள் குடியிருப்புகள் ஒன்றும் இல்லாத இந்த விவசாய வீதியை திடுதிப்பென கார்ப்பட் வீதியாக்க வேண்டிய தேவை என்ன?

குறித்த வயல் சார்ந்த நன்செய் நிலத்தை காரைதீவு பிரதேசசெயலகம் காணி மீட்பு திணைக்களத்திற்கு பிரகடனப்படுத்த சிபார்சு செய்திருந்தது.

வீதி அபிவிருத்திஅதிகாரசபையின் பாரியதிட்டத்தின்கீழ் இவ்வீதி மக்களது அபிப்பிராயம் கோரப்படாது ,காரைதீவு பிரதேசசெயலாளர் மற்றும் தவிசாளரிடம் எந்த அனுமதியையோ கலந்துரையாடலையோ செய்யாமல் விவசாயிகளுக்கு தீங்கிழைக்கக் கூடிய இவ்வீதிஅமைப்பதை நாம் முற்றாக எதிர்க்கிறோம். குறித்த காணிஅமைந்துள்ள நீர்ப்பாசனத்திணைக்கள பிராந்திய பொறியியலாளரிடமும் எந்த அனுமதியையும்பெறாமல் இவ்வீதி அமைக்கப்படுவது குறித்து திரைமறைவில் ஏதோசதி இருப்பதாக மக்கள் உணருகின்றனர். கல்முனையில் கடந்தவருடம் ஆரம்பித்தபோது பலத்த எதிர்ப்புகள் கிளம்பியதனால் அதனை நைசாக கைவிட்டு இப்போது தன் தென்முனையிலுள்ள காரைதீவிலிருந்து ஆரம்பித்துள்ளார்கள்.

கடந்தகால அனுபவத்தை வைத்துப்பார்க்கின்றபோது இதனை திட்டமிட்ட சதிவேலையாகவே பார்க்கிறோம்.எனவே இச்சதிவலையிலிருந்து காரைதீவு தமிழ்க்கிராமத்தை மீட்க ஜனாதிபதி தொடக்கம் அரசியல்வாதிகளும் ,அதிகாரிகளும் உதவவேண்டும் என காரைதீவு தமிழ்மக்கள் வேண்டுகின்றார்கள். இவ்வாறு அங்கு தெரிவிக்கப்பட்டது.

கடந்தவருடம் ஜனவரியில் இத்திட்டம் கல்முனையிலிருந்து ஆரம்பிக்கப்படவிருந்தபோது அங்குள்ள பௌத்தமதகுரு வண.சங்கரத்ன தேரர் மற்றும் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்ட தமிழ்பிரமுகர்களின்எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டமை தெரிந்ததே.

கிழக்கில் 300 ஐ தாண்டிய கொரோனா மரணங்கள்!

மரணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக கல்முனை தெற்கு மற்றும் அக்கரைப்பற்றுப்பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் இருவர் மரணித்துள்ளனர்.

இதேவேளை தொற்றுக்களின் எண்ணிக்கை 16ஆயிரத்தை கடந்துள்ளது. நேற்று(12)வரை 16431பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.இவர்களில் 15516 பேர் குணமாகி வீடு சென்றுள்ளனர்.618பேர் சிகிச்சைபெற்றுவருகின்றனர். நேற்று ஆக %5பேருக்கு மாத்திரமே தொற்று இணங்காணப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட 75ஆயிரம் சினோபாம் தடுப்பூசிகளில் 74ஆயிரத்து 901ஊசிகள் நேற்று (12) வெள்ளி வரை ஏற்றப்பட்டுள்ளதென கிழக்கு மாகாண சுகாதாரதிணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

மட்டு.மாவட்டத்தில் 24995பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 24991 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 24915பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனை புறக்கணிப்பு!

கல்முனைப்பிராந்தியத்திற்கு தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று திங்கட்கிழமை(12) முதல் ஆரம்பிக்கப்படும் என்று சுகாதாரத்துறையினர் முன்பு கூறியிருந்தபோதிலும் இது வரை அதற்கான சமிக்ஞைகள் எதனையும் காணவில்லை. இதுதொடர்பில் கிழக்கு மாகாண சுகாதாரதிணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக்கிடம் கேட்டபோது இதுவரை மத்தியஅமைச்சிலிருந்து உறுதியான தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. மாத இறுதியில் கிடைக்கப்பெறலாம். அவ்வாறு கிடைக்கும்பட்சத்தில்; உடனடியாக அவற்றை வழங்க தயார்நிலையிலுள்ளோம் என்று பதிலளித்தார்.

அதற்கான முன்னாயத்தவேலைகள் சகல சுகாதாரப்பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அங்கு 60வயதுக்கு மேற்பட்டோர் கர்ப்பிணித்தாய்மார்கள் தொழிற்சாலை ஊழியர்கள் வைத்தியசாலை மற்றும் சுகாதாரஅலுவலகங்களில் பணியாற்றுவோர் வீட்டிலிருக்கும் நெருங்கிய உறவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்தப்படவிருக்கின்றன.

அதேவேளை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு கிழக்குமாகாணமெங்கும் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன. ஆனால் கல்மனைப்பிராந்தியத்தில் ஆசிரியர்களுக்கு இவ்வாய்ப்பு கிடைக்கவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைகள் சுகாதாரஅலுவலகங்கள் குறித்த நிலையங்கள் போன்றவற்றில் அவை வழங்கப்படவிருக்கின்றன. அந்தந்த சுகாதாரவைத்தியஅதிகாரிகள பொதுசுகாதாரபரிசோதகர்கள் கிராமசேவையாளருடன் தொடர்புகொண்டு அவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

துவரைகாலமும் கிழக்கில் அன்ரிஜன் பிசிஆர் என 1லட்சத்து 52ஆயிரத்து 025பேருக்கு சோதனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் இராணுவப் பயிற்சிகள் நடைபெறவுள்ள மேய்ச்சல்

கிடாரம்போட்டமடு, மேசைக்கல் போன்ற பிரதேசங்களில் இருந்து பண்ணையாளர்களை வெளியேறும்படி இராணுவத்தினர் தெரிவித்தமை தொடர்பில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு முடிவு எட்டப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம்(ஜனா), ஏறாவூர் பற்று பிரதேசசபை தவிசாளர் சி.சர்வானந்தன், அரசாங்க அதிபர் கே.கருணாகரன், ஏறாவூர் பற்று பிரதேசசெயலாளர் எஸ்.ராஜ்பாபு, 23 படைப்பிரிவின் லெப்ரினட் கேர்ணல் உபுல் ரத்நாயக்க மற்றும் திணைக்களத்தலைவர்களும், பண்ணையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த வாரத்தில் குறித்த பிரதேசங்களில் இராணுவத்தினரால் இராணுவச் சூட்டுப்பிரதேசம் என்ற பதாதைகள் பொருத்தப்பட்டது டன், பண்ணையாளர்களிடம் அவ் பிரதேசத்திலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் பண்ணையாளர்களால் எடுக்கப்பட்ட செயற்பாடுகளினால், இராணுவத்தரப்பு, அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இச் சந்திப்பில், இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது, இராணுவப் பயிற்சி ஒன்றுக்காக இம் மாதம் 17 மற்றும் 17ஆம் திகதிகளில் இப்பிரதேசத்திலிருந்து பண்ணையாளர்கள் விலகியிருக்க வேண்டும். எதிர்வரும் இரண்டு மாதங்களிலும் இது போன்று இரண்டு நாட்களைக் கொண்ட பயிற்சிகள் நடைபெறவுள்ளன. அவ்வேளைகளில் இரு வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்படும் என்றும் லெப்ரினட் கேர்ணல் உபுல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இருப்பினும் இன்று செவ்வாய்க்கிழமை காலை திணைக்களங்களின் பிரதிநிதிகள், இராணுவத்தினர் மற்றும் பண்ணையாளர்கள் இணைந்து நேரடியாகப்பார்வையிடுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். ஏற்பட்ட சிக்கல் நிலமையினை சீர் செய்யமுடியும் என்றும் முடிவு காணப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் இவ்வாறு நீண்டகாலமாகப் பண்ணை நடவடிக்கைகளில் ஈடுபடும் பண்ணையாளர்களை கட்டாயத்தில் வெளியேற்ற முயன்றமையினால் தாங்கள் சிரமப்பட்டதாகவும் ஒரு சில நாட்கள் மாத்திரம் என்றால் அது குறித்து ஆட்சேபணையில்லை என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும் செவ்வாய்க்கிழமை களவிஜயம் ஒன்றின் மூலம் நிலைமைகளை அவதானித்து அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்வது என நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு காணப்பட்டது.

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

COLOMBO SHIPPING SOLUTIONS (PVT) LTD.
Galle Road, Colombo – 06, Sri Lanka.
Tel : +94 112 555 567
Whatsapp: +94 77 1766769
E-mail - ops@colomboshipping.com
web - www.colomboshipping.com
We provides a comprehensive range of shipping, logistics and marine services. With office in Colombo, Galle, Hambantota and Trincomalee, we cover all ports in the country, and handle any type of vessels and cargoes.
Services include:
Ship Agency Operations, Marine Services, Ship supplies, Total Project Logistics, Offshore Support Services, Crew Manning Services and Private Maritime Security Services.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

சீனாவின் இலங்கை மீதான ஊடுருவல் கச்சைதீவை இந்தியா மீளப்பெறக்கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம்

ஸ்ரீநேசன் தெரிவிப்பு

சீனாவின் இலங்கை மீதான ஊடுறுவல் கச்சை தீவை கூட சிலவேளை இந்தியா மீளப் பெறக்கூடிய நிலமையை ஏற்படலாமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் இங்கு கருத்து தெரிவிக்கும்போது,

சீனா தற்போது வடபுலம் யாழ்ப்பாணம் வரை ஊடுருவி இருக்கின்றது பூநகரியில் கௌதாரிமுனையில் இப்போது கடலட்டை வளர்க்கும் ஒரு பண்ணையை ஏற்படுத்தி இருக்கின்றார்கள் இதுகூட இங்கு இருக்கின்ற மக்களுக்கு தெரியாமல் நடந்து இருக்கின்றது, முறையான அனுமதி பெறப்படவில்லை, இப்படியெல்லாம் பார்க்கின்றபோது இன்று சீனா யாழ்ப்பாண குடாநாட்டு பக்கமாகச் சென்றால் அது இந்தியா இலங்கை மீது ஆத் திரம் அடையக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத் தக்கூடும்.

ஆகவே இந்நிலையில் பார்த்தால் அவர்கள் எங்களுக்கு அபிவிருத்தி என்ற போர்வை யில் வருகின்றபோது இந்தியா தன்னுடைய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனும் நிலைக்கு வரும். எனவே சீனாவும் இந்தியாவும் போட்டி போடுகின்ற மோதுகின்ற ஒரு போர்க்களமாக இந்து மா சமுத்திரத்தில் இலங்கை மாறப்போ கின்றது என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது.

எனவே இப்படியான செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அண்மையில் உள்ள இந்தியா, ஜப்பான், சீனா போன்ற மற்றய நாடுகளோடு

பொதுவான சமநிலையான முறைமையை ஏற் படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆலோசனையாக இருக்கின்றது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக் கின்ற போது அது இந்தியாவிற்கு விடுக்கின்ற ஒரு சவாலாகத்தான் பார்க்கப்படுகின்றது, ஏன் என்றால் இன்று சீனா ஒரு முத்துமாலை வியூகத்தை அமைத்துவருகின்றது. பாக்கிஸ் தானாக இருக்கட்டும் நேபாலாக இருக்கட்டும் மியன்மாராக இருக்கட்டும் வங்காளதேசாக இருக்கட்டும் எல்லா நாடுகளிற்கும் அளவிற்கு அதிகமான கடன்களை கொடுத்து பொறிக் குள் விழுத்தி அந்த இந்தியாவை சுற்றி பெரிய தொரு முத்துமாலை வியூகத்தை அமைத்து இருக்கின்றது. அந்த முத்துமாலை வியூகத்தில் முக்கியமான ஒரு கேந்திர நிலையமாக இப் போது இலங்கை மாறி இருக்கின்றது.

வட புலத்தில் அவர்கள் தங்களுடைய கால்களை தரிப்பார்களாக இருந்தால் இந்தி யாவின் ஆயுத களஞ்சியமென்பது தென்னிந் தியா பக்கமாக இருக்கின்றது. ஆகவே நவீன தொழில் நுட்பங்களை வைத்துக்கொண்டு இந்தியாவை முழுமையாக அவதானிப்ப தற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. இந்த நிலை யில் நான் சொல்லக்கூடிய ஒரு விடயமாக இருப்பது நிச்சயமாக சீனா கிழக்கிலும் வடக் கில் கால் ஊன்றுகின்றபோது நிச்சயமாக அது இந்துயாவிற்கு ஒரு பெரிய ஆத்திரத்தை ஏற் படுத்துகின்ற ஒரு செயலாக அது இருக்கும் அதன்மூலமாக இந்தியா மாத்திரம் அதனை எடுத்துக்கொள்ளாமல் யப்பானும் விரும் பாது, அமெரிக்கா விரும்பாது, மேற்குலக நாடுகளும் விரும்பாது, எனவே அபிவிருத்தி என்கின்ற போர்வையில் சீனாவின் இலங்கை மீதான ஊடுறுவல் என்பது நிச்சயமாக இந் தியாவிற்கும் இலங்கைக்கும் பாரியதொரு பகையை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாக இருக்கும் சில வேளைகளில் கச்சை தீவை கூட இந்தியா மீளப்பெறக்கூடிய நிலமை ஏற்படலாம் அவர்களுடைய பாதுகாப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு என தெரிவித் தார்.

சாய்ந்தமருது நகர சபை மலர்ந்தே ஆகவேண்டும்

பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் சலீம்

(நூருல் ஹுதா உமர்)

124 வருடங்கள் பழமையான சாய்ந்தம ருது உள்ளூராட்சி சபையை பெறுவதற்கு போராடிய முன்னிலை போராளி மர்ஹூம் வை.எம் ஹனீபா அவர்கள் மறைந்து 100 நாட்கள் கடந்துவிட்டது, இந்நிலையில் அவருக்காக பிரார்த்திக்கும் அதே வேளை அவரதும், எமதும் நோக்கம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பது கவலை யான விடயம் என சிரேஷ்ட நிர்வாக சே வை அதிகாரியும், இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம். சலீம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், சாய்ந்தமருது பிரதேசம் இற்றைக்கு 124 வருடங்களுக்கு முன்பிருந்தே உள்ளூராட்சி சபையை கொண் டிருந்த விடயம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு வரலாற்றுத் தடயமாக காணப்படுகிறது. இலங்கை முஸ்லிம்க ளின் வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலமாக இருக்கும் இக்கால கட்டத்தில், அதற்கான பல ஆய்வுகள் மற் றும் அதற்கு முன்னோடியான பல நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சாய்ந்தமருது பிரதேசம் ஒரு வரலாற்று பூர்வீகம் கொண்டது என்பது பல ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மை.

டச்சுக் கம்பனித் தூதுவர் ஜோரிஷ் ஸ்பில் பேகனின் குழுவினர் கி.பி.1602.05.31ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேசத்தில் தரையி றங்கி கண்டிக்கு சென்றதாக, கொழும்பி லுள்ள டச்சு நூதனசாலை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.1630ஆம் ஆண்டில் எமன் தேசத்தில் இருந்து மதிப் புக்குரிய 'அஸ்கோல் அவ்லியா' என்று அழைக்கப்பட்ட இறை நேசர் இங்கு வந்து இஸ்லாமிய அழைப்புப் பணி செய்ததுடன் சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலையும் நிருவகித்துள்ளார்கள், அத்துடன் அன்னாரது சியாரம் இன்றும் சாய்ந்தமருது பள்ளிவாசல் முன்றலில் காணப்படுகின்றது.

கி.பி.1637ஆம் ஆண்டு ஒல்லாந்தர் சா ய்ந்தமருது கடற்கரையை அடைந்த போது அங்கு வெண்ணிற ஆடை அணிந்த முஸ்லீம்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ள னர். கி.பி.1691ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி எழுதப்பட்ட செப்பேடு சாய்ந்தமருது பள்ளிவாசல் மற்றும் இங்கு வாழ்ந்த குடியி ருப்புகளின் பூர்வீகத்தை பறைசாற்றுகின்றன. கி.பி.1691ஆம் ஆண்டில் கண்டி அரசனின்

'சனச' விலும் சாய்ந்தமருது குறிப்பிடப் பட்டுள்ளது. சாய்ந்தமருது மாளிகைக்காடு மொகிதீன் ஜும்மா பள்ளிவாசல் சுமார் 400 வருடங்களுக்கு மேற்பட்ட எழுதப்பட்ட வரலாற்றைக் கொண்டது. மட்டுமல்லாது காரைதீவு முச்சந்தி மக்காம், பக்கீர்சேனை சியாரம் போன்றவற்றுடன் மாளிகைக் காடு, மாவடிப்பள்ளி போன்ற கிராமங் களும் ஆத்மீக ரீதியில் நிருவகிக்கப்பட்டது. இவ்வாறாக குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பின்னணியை கொண்ட சாய்ந்தமருது பிரதேசம் இற்றைக்கு 124 வருடங்களுக்கு முன் பிருந்தே உள்ளூராட்சி சபையை கொண்டிருந்தது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு வரலாற்றுத் தடயமாக காணப்படுகிறது.

இலங்கை பிரித்தானியரின் ஆட்சியில் இருந்த காலத்தில் மகாராணியின் பிரதிநி தியான கௌரவ ஆளுநரின் பிரகடனத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தின் சாய்நதமருது உட்பட 5 பிரதேசங்கள் 1897.02.19ஆம் திக தியிலிருந்து செயற்படத்தக்கதாக சானிடரி சபைகளாக குடியேற்ற செயலாளர் அவர்க ளினால் அரச வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டது. 1897ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி வெளிவந்த சிலோன் அரசாங்க வர்த்தமானி, அன்றைய குடியேற்ற செய லாளர் திரு ஈ நோயல் வர்கேர் அவர்கள் பிரித் தானிய ஆளுநரின் ஆணைப்படி பிரகடனம் ஒன்றை வெளியிட்டார்.

அப்பிரகடனத்தின் படி 1892ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க 'சிறிய நகரங்கள் சானிட்டரி கட்டளைச் சட்டத்தின்' 2ஆம் பிரிவிற்கு இணங்க சனிட்டரி சபைகள் என்ற அந்தஸ்து டன் கிழக்கு மாகாணத்தின் பின்வரும் கிரா மங்களான, 1. காத்தான்குடி, 2.ஏறாவூர், 3.ச ாய்ந்தமருது, 4.கல்முனை மற்றும் 5. சம்மாந் துறை போன்றன அன்றைய நிறைவேற்று சபையின் ஆலோசனைக்கு அமைய கௌரவ ஆளுநர் அவர்களின் செயலாளர் அவர்களி னால் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நாங்கள் பிறக்காத அறிந்திராத காலத்தில் வழங்கப்பட்ட சாய்நதமருது உள்ளூராட்சி சபையை அரசியல் காரணங்களுக்காக, சில அரசியல்வாதிகள் பின்புலத்தில் செயற்பட்டு இல்லாமல் ஆக்கப்பட்டது. நாம் பிறந்து அறிந்த தெரிந்த காலத்தில் 1987ஆம் ஆண் டின் 15ஆம் இலக்கச்சட்டத்தைப் பயன்படுத்தி எமது பிரதேசத்தின் அரசியல் அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது மட்டுமல்லாது, இங்கு அரசியல் தலைமைக்குப் பதிலாக அரசியல் முகவர்கள் செயற்பட ஆரம்பிக்கப் பட்ட செயற்பாடு இன்றுவரை தொடர்கிறது. இவ்வாறு எமது தொன்மை மிக்க சபை இல் லாமல் ஆக்கப்பட்டது வரலாற்றுத் தவறு மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை மறைக்கின்ற செயற்பாடுமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏறாவூர்ப் பற்று பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவில்

2800 பேருக்கு தடுப்பூசி

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் ஏறாவூர்ப் பற்று பிரதேச சுகாதார வைத்திய திகாரி பிரிவில் இதுவரை சுமார் 2800 வயோ திபர்கள் மற்றும் களஉத்தியோகத்தர்களுக்கு சைனோபாம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்தியதிகாரி ஈ. சிறிநாத் தெரிவித்தார்.

தற்போது கல்வித்துறையைச் சார்ந்த உத் தியோகத்தர்களுக்கு சைனோபாம் தடுப்பூசி வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

சைனோபாம் தடுப்பூசி வழங்கும் பணிகள் (12) கித்துள் பிரதேசத்தில் நடைபெற்றது.

கித்துள் பாடசாலை மண்டபத்தில் நடை பெற்ற இப்பணிக்கு விமானப்படையினர் ஒத்துழைப்பு வழங்கினர்.

சீரற்ற காலநிலை;நுவரெலியா மாவட்டத்தில் 202 குடும்பங்களைச் சேர்ந்த 831 பேர் பாதிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மலையகத்தில் நிலவும் காற்று மழையுட னான சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் 202 குடும்பங்களைச் சேர்ந்த 831 பேர் நேற்று (12.7.2021) வரை பாதிக்கப் பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உதவி அத்தி யட்சகர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் 45 குடும்பங்க ளைச்சேர்ந்த 212 பேர் நேற்று வரை மண்சரிவு, வெள்ளம் மற்றும் பலத்த காற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். 90 வீடுகள் பகுதியள வில் சேதமடைந்துள்ளதாகவும், இதுவரை எவ்வித உயிர் சேதங்களும் ஏற்படவில்லை எனவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொடவின் அறிவுறுத்தலின் பேரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எனவும் தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மக்கள் மின அவதானத்துடன் இருக்குமாறும் அவர் கேட் டுக்கொண்டுள்ளார்.

யாரிடமும் அனுமதி பெறாமல் வீதி அமைப்பதன் நோக்கம் என்ன?

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஜெயசிறில் கேள்வி

(வி.ரி.சகாதேவராஜா)

யாரிடமும் அனுமதி பெறப்படாமல் எந்த வித குடியிருப்புகளுமற்ற நன்செய் நிலத்தில் அவசரமாக மாவடிப்பள்ளி - கல்முனை வீதி செப்பனிடப்படுவதன் உள்நோக்கம் என் ன?இது விடயத்தில் எமது மக்களுக்கு நியாய மான சந்தேகமுள்ளது.விவசாயிகளைக் காப் பாற்றும் ஜனாதிபதி எமது மக்களின் விவசாய நிலத்தையும் காப்பாற்ற இவ்வீதியமைப்பை உடனடியாகத் தடைசெய்யவேண்டும்.

இவ்வாறு காரைதீவு பிரதேசசபைத்தவிச ாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் நேற்று (12) நண்பகல் ஊடகங்களுக்கு கருத்துரைக் கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த பழம்பெரும் காரைதீவு தமிழ்க்கிராமத்தின் இருப்பை கபளீகரம் செய்யும் மாவடிப்பள்ளி - கல்முனை வய லோர கார்ப்பட்வீதியமைப்பதை பார்த்துக் கொண்டிக்கிறீர்களே! நீங்கள் அனுமதித் துவிட்டீர்களா? என்று என்னில் சந்தேகப் பட்டு காரைதீவு பொதுநல அமைப்புகளும் மக்களும் என்னை கேள்விக்கமேல் கேள்வி கேட்கின்றனர்.

எனது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இவ்வீதி அமைப்பு தொடர்பில் என்னிடம் யாரும் கலந்துரையாடவுமில்லை அனுமதி பெறவுமில்லை.

சரி என்னிடம்தான் அனுமதி பெறவில்லை யென எண்ணிக்கொண்டு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜனைத் தொடர்புகொண்டு கேட் டேன். அவரும் தனக்கு எதுவும் தெரியாது என்னிடம் யாரும் கேட்கவுமில்லை அனும

திபெறவுமில்லை என்று பதிலளித்தார்.

தொடர்ந்து கல்முனை நீர்ப்பாசனப் பொறி யியலாளர் த.ராஜ்குமாரிடம் தொடர்பு கொண்டுகேட்டபோது இதுபற்றி யாரும் பேசவுமில்லை கதைக்கவுமில்லை தனக்கு எதுவுமே தெரியாது என்றார்.

இறுதியாக இவ்வீதியமைப்புக்குப் பொறுப்பான வீதிஅபிவிருத்தி அதிகாரச பையின் கல்முனைப்பிராந்திய தலைமைப் பொறியியலாளர் தா.சிவசுப்பிரமணியத் துடன் தொடர்புகொண்டு கேட்டபோது இது பற்றி தனக்கு ஒன்றும்தெரியாது. இது அக்கரைப்பற்று தலைமை அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது என பதிலளித்தார்.

இவ்வாறு காரைதீவு எல்லைக்குள் போடப் படும் இவ்வீதி அமைப்புடன்சம்பந்தப்பட்ட யாரிடமும் அனுமதி பெறாமல் இவ்வீதி ரக சியமாகசட்டவிரோதமாக போடப்படுவதன் நோக்கம் என்ன? என்ற வினா எழுகிறது.

எனவே நாட்டின்தலைவர் என்ற வகையில் ஓர் இனத்தை கபளீகரம் செய்யும் நோக்குடன் அமைக்கும் இவ்வீதியை உடனடியாக நிறுத் துமாறு இப்பிரதேச உள்ளூராட்சித்தலைவர் என்ற வகையில் பணிவாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.என்றார்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான
காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

• இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
• வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
• வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
• Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Sj SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்விதே துணை

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



Aaran Ayurveda
& Wellness Massage

Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

மஸ்கெலியா பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்கள் போராட்டம்

(க.கிஷாந்தன்)

மஸ்கெலியா பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்கள், சபைக்கு முன்னால் - சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிபொருட்களின் விலை உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியும், போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், மலையகத்தில் தடுப்பூசி திட்டத்தை துரிதப்படுத்துமாறு அழுத்தம் கொடுத்துமே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும் வேலை நாட்கள் குறைக்கப்பட்டு, தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு என்பது கண்துடைப்பு நாடகமே. கைக்காசுக்கு வேலை செய்பவர்களுக்கு இன்னமும் 700 ரூபாவே வழங்கப்படுகின்றது. எனவே, ஆயிரம் ரூபா விவகாரத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அதேபோல ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும், ஊடக அடக்குமுறைக்கு இடமளிக்கமுடியாது எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

திருமலை தபால் ஊழியர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றல்

(கதிரவன்)

திருகோணமலை தபால் அத்தியட்சகர் பிரிவில் கடமையாற்றும் 191 ஊழியர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி நேற்று வழங்கி வைக்கப்பட்டது.தபால் அத்தியட்சகர் அருட்செல்வனின் வழிகாட்டலில் ஊழியர்கள் இதனை பெற்றுக் கொண்டார்கள்.

வெல்லாவெளியில் நீண்ட நாள் சட்டவிரோத மண் அகழ்வு: புல்டோசர் மீட்பு

(எஸ்.சபேசன்)

வெல்லாவெளி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட வாழைக்காலை பிரதேசத்தில் நீண்ட நாட்களாக சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டு வந்த நபர்களை சுற்றிவளைத்த போது புல்டோசர் ஒன்று மீட்கப்பட்டுள்ளசம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் புல்டோசர்களைக்கொண்டு நீண்டகாலங்களாக ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வினை மேற்கொண்டு விற்பனையில் ஈடுபட்டுவருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்;ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்,உதவி பொலிஸ் அட்தியட்சகர் அவர்களின் பணிப்புரைக்கமைவாக வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்தசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளதாகவும் அவர்கள் மண் அகழ்விற்கு பயன்படுத்திய புல்டோசர் ஒன்று மிட்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் தொடர்ந்து சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டு வருவதனால் அப்பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்கள், மக்களின் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் வீதிகள் நாளுக்கு நாள் சேதமடைந்து வருவதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட புல்டோசர் நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட பகுதி கடற்பரப்பில் 344.55 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

(வடமராட்சி நிருபர்)

வட பகுதி கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது 344.55 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை (12) அதிகாலை வட பகுதி கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது அனலைதீவு கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றினை சோதனையிட்டபோது சுமார் 103 மில்லியன் ரூபாய் பெறுமதியான 344. 55 கிலோ கிராம் கேரளாகஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்டவர்களும், மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகளும் காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவில் -13 கிராம சேவையாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாரை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குற்பட்ட பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில்-13 பாக்கியத்தை எனும் கிராம சேவையாளர் பிரிவு நேற்று காலை 6.00 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேசத்தில் (09,10) ஆகிய திங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 47 நபர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது. உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் Covid-19 கொரோனா விசேட தடுப்பு செயலணியினரின் விஷேட கூட்டம் பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.யு. அப்துல் சமட் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ் எம். அப்துல் மலிகின் ஒருங்கிணைப்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் கேட்போர் கூடத்தில் (10) நடைபெற்றது. இதன் போது குறித்த பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் தீர்மாணிக்கப்பட்டன.

இந்த விஷேட கலந்துரையாடல் கூட்டத்தில் பொத்துவில் பிரதேச உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. திஸாநாயக்க, செங்காமம் இராணுவ கட்டளைத் தளபதி திரு. வசந்த, விசேட அதிரடிப்படை பொத்துவில் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி திரு.வீரசேகர, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரிவு கிராம சேவையாளர் எம். எஸ். எம்.றிஸ்வி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள கிராம சேவையாளர் பிரிவில் வசிப்பவர்கள் வெளியிடங்களுக்குச் செல்லுவது மற்றும் வெளியிடங்களில் வாசிப்பவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்துக்குள் பிரவேசிப்பது என்பன முற்றாகதடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சினோபார்ம் முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொட்டகலை பொது சுகாதார வைத்திய பிரிவுக்குப்பட்ட தலவாக்கலை கிறேட்வெஸ்டன் கிராம சேவகர் பிரிவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணி கிறேட்வெஸ்டன் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் கிறேட்வெஸ்டன், லூசா, ஸ்கல்பா, மற்றும் ஹொலிரூட் மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 82 சதவீமானவர்களுக்கு சினோபார்ம் முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக கொட்டகலை பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி சுதர்சன் தெரிவித்தார்.

அதேவேளை கொட்டகலை பொது சுகாதார வைத்திய பிரிவுக்குப்பட்ட ஹொலிரூட் தெவிசிறிபுற கிராம சேவகர் பிரிவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணி தலவாக்கலை சுமன மகா வித்தியாலத்தில் நடைப்பெற்றது.

இதில் ஹொலிரூட் கிழக்கு தோட்டம், ரத்னில்கல்ல, தெவிசிரிபுற மற்றும் குமாரகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 88 சதவீதமானவர்களுக்கு சினோபார்ம் முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குச்சவெளி வடலி குள கிராமத்தின் பொது சந்தை கட்டிடத்தினை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(எம்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசசபைக்குட்பட்ட குச்சவெளி வடலிக்குள கிராம சந்தை கட்டிடம் நீண்ட காலமாக புனரமைக்கப் படாது சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் பற்றைக்காடுகளாக காணப்படுவதோடு பகுதியளவில் சேதமடைந்தும் காணப்படுகின்றது. இதனை புனரமைத்து தருமாறு குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் அவர்களிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய தவிசாளர் அவர்களின் விடா முயற்சியின் காரணமாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து குறித்த சந்தைக் கட்டிடம் புனரமைப்பு செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவ்விடயத்திற்காக முயற்சி செய்த குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் மற்றும் இந்த நிதியினை ஒதுக்கிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவர்களுக்கு பிரதேச மக்கள் தங்களின் நன்றியை தெரிவிக்கின்றனர்.



கோடைகால சுற்றுலா
கொண்டாட்டம்
இத்தாலி
2021
பயணம் வாழ்க்கையின் வழிகாட்டி...
24.07.2021 முதல்
30.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels

நல்லூர் சுவையகம்
உங்கள் இல்ல விழாக்கள் அனைத்தையும் சிறப்பித்திட
எங்கள் சைவ அசைவ உணவுகளைக்கொண்டு
மெருகூட்டுங்கள்.
Party Service
சுவிஸ் முழுவதிற்கும் எமது சேவை
மலிவு, தரம், நம்பிக்கை
எங்கள் விளம்பரத்தை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு
எங்கள் Fb பக்கத்தை லைக் செய்யுங்கள். Nallur Travels
Nallur Angadi Murtenstrasse 269, 3027 Bern.
031 991 85 31 | 079 964 04 74

கோடைகால
சுற்றுலா கொண்டாட்டம்
10.07.2021 முதல் 16.07.2021 வரை 31.07.2021 முதல் 6.08.2021 வரை
Amazing
Spain
it Begins with the pepole...
பேருந்து
புறப்படும் இடங்கள்
St Galan | Zurich | Baden
Aarau | Bern | Freiburg
Lausanne & Geneva.
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels
031 991 85 31
079 964 04 74

2021
கோடைகால
சுற்றுலா
கொண்டாட்டம்
Wonderful
Portugal
17.07.2021 முதல்
23.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels

கதிர்காமத்தில் முதலாவது நாள் பெரஹரா

இலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவத்தையொட்டிய கொடியேற்ற நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை சுகாதாரமுறைப்படி நடைபெற்றது. அன்று இரவு முதலாவது நாளுக்குரிய பெரஹரா பக்தர்களின்றி மட்டுப்படுத்தப்பட்டஅளவில் இடம்பெற்றபோது.....

படங்கள் : வி.ரி.சகாதேவராஜா

கொரோனா தொற்று ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் உபகரணங்கள் கையளிப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)

கிண்ணியாவில் கொரோனா தொற்றின் காரணமாக மரணம் அடையும் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்குரிய அத்திய வசிய உபகரணங்கள், மற்றும் தொற்று நீக்கிகள் என்பனவற்றை அல் இஹ்ஸான் ரஸ்ட் இலங்கை - நிதி உதவியுடன், . கிண்ணியா சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு (SDIA) அமைப்பின் அனுசரணையுடன் கிண்ணியா மாஞ் சோலைச்சேனை ஜனாஸா நலன்புரி சங்கத்திற்கு வழங்கி வைக்கப்பட்டது.

SDIA அமைப்பின் தலைவர் ஏ.எம் எம்.றியாஸின் வழிகாட்டலின் பேரில் இவ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாஞ் சோலைச்சேனை மையவாடி மண்டபத்தில் இடம் பெற்றது

SDIA அமைப்பின் உப தலைவர் அன்சார் பரிஸ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜாபிர், ஜனாஸா நலன்புரி சங்கத்தின் தலைவர் மற்றும் SDIA அமைப்பின் ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆலயங்களில் வழிபாடுகள் நடைபெற்றால் மக்களுக்கு நோயில்லாத வாழ்வு கிடைக்கும்

(பாறுக் ஷிஹான்)

ஆலயங்களில் உற்சவங்கள் வழிபாடுகள் நடைபெற்றால் தான் நாட்டில் மக்களுக்கு நோய் நொடியில்லாத வாழ்வு கிடைக்கும். நாட்டை ஆளுகின்ற அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச பிரதமர் மஹிந்த ராஜபக்சவிற்கு அனைத்து இந்து ஆலயங்கள் சார்பிலும் இந்து மக்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவிப்பதாக பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவாகம கலாநிதி அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை-வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சிந்தாயாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கு. நிமலேஸ்வரக் குருக்கள் பங்குபற்றலுடன் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதார சூழ் நிலை காரணமாக மதவழிபாட்டுத்தலங்களில் மக்கள் கூடி வழிபடமுடியாத சூழ்நிலையுடன் அரசாங்கம் சட்டம் ஒன்றினை பிறப் பித் தி ருந் தது. அந்த தருணத்தில் சர்வதேச இந்துமத குருபீடம் பல தடவைகள் ஆலயங்களில் பூஜைகள் நடைபெற வேண்டும். இவ்வாலயங்களில் உற்சவங்கள் வழிபாடுகள் நடைபெற்றால் தான் நாட்டில் மக்களுக்கு நோய்நொடியில்லாத வாழ்வு கிடைக்கும்.

நாட்டை ஆளுகின்ற அரசாங்கத்திற்கும் நன்மை கிடைக்கும் என்று பல தடவைகள் ஊடகங்களில் ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆலயங்களுக்கு 100 அடியவர்களாவது அனுமதிக்கப்பட வேண்டும் என பல தடவைகள் கூட வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த வகையில் கடந்த

வெள்ளிக்கிழமை ஆலயங்கள் மத வழிபாட்டு தலங்களில் வழமையான முறையில் வழிபாடுகளில் கலந்து கொள்ளலாம் என அரசாங்கமும் சுகாதார துறையினரும் அனுமதி அளித்திருக்கின்றது.

இதனை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிற்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிற்கும் சுகாதார பிரிவிற்கும் பாதுகாப்பு அமைச்சிற்கும் சர்வதேச இந்துமத குருபீடத்தின் சார்பிலும் இலங்கை வாழ் அனைத்து இந்து ஆலயங்கள் சார்பிலும் இந்து மக்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது என்றார்.

கொட்டகலையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயம்

(க.கிஷாந்தன்)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பண்ணைக்கு அருகாமையில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுங்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கி பயணிப்பதற்கு தயாரான வேன் ஒன்றில், வேகக்கட்டுப்பாட்டை இழந்து குறித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுங்காயமைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக விபத்தில் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்ளும் பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதேச மக்களுக்கு அரசாங்கத்தினால் 8 கோடி நிவாரணம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு காத்தான்குடியில் தனிமைப்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் 10000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.

7630 குடும்பங்களுக்கு இந்நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென அரசாங்கம் % கோடியே 63 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளதாக காத்தான்குடி பிரதேச செயலாளர் எம் உதயசிறீதர் தெரிவித்தார்.

முதல் கட்டத்தில் 5000 ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த கட்டத்திலும் 5000 ரூபாய் பெறுமதியான நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

முடக்கப்பட்ட 8 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்காக இந்நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதரின் வழிகாட்டலில் கிராம உத்தியோகத்தர்களினால் குறித்த கிராமங்களிலிருந்து நிவாரணப் பொருட்கள் வினியோகம் இடம்பெற்று வருவது றிப்பிடத்தக்கது.

நிதி உதவி வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியாவை சேர்ந்த இளம் தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எம்.எம்.பைஸல் பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகிறார். அந்த வகையில் கிண்ணியா வைத்தியசாலை மகப்பேற்று பின்பராமரிப்பு நிலையத்துக்கான நன்கொடையை கிண்ணியா வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்ஹ் எல்.எம்.நயீம் மற்றும் செயலாளர் தாதி உத்தியோகத்தர் முகமட் நௌஷாத் ஆகியோர்களிடம் வழங்கி வைத்தார்.

முல்லைத்தீவு வலய கல்வி பணிப்பாளராக இரத்தினம் தமிழ் மாறன் நியமனம்

(வடமராட்சி நிருபர்)

முல்லைத்தீவு வலய கல்விப் பணிப் பாள ராக இரத்தினம் தமிழ் மாறன் வட மாகாண கல்வி அமைச் சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வடமராட்சி வலயத்தில்திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப் பாள ராக இவர் கடமையாற்றியிருந்தார்.

முல்லைத்தீவு வலயத்திற்கு நிரந்தர கல்விப்பணிப் பாளர் இன்மையால்துணுக்காய் வலயகல்விப் பணிப் பாளர் புதிய நியமனம் வரை பதில் கடமையாற்றியி ருந்தார்.

நான்கு தினங்களாக மீனவர்களை காணவில்லை

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை கடற்கரைப் பிரதேசத்திலிருந்து கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் இயந்திரப் படகொன்றில் கடற்றொழிலுக்காகச் சென்ற இரு மீனவர்கள் இது வரை கரைக்கு திரும்பவில்லை என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக அம் பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசத்தில் பலத்த காற்றுடனான காலநிலை நிலவி வருவதனால் இம் மாவட்டத்தின் பெரும் பானான மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் தமது வாழ்வாதாரம் வெகுவாகப் பாதித்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் கடற்றொழிலுக்குச் சென்ற இரு மீனவர்களும் நான்கு தினங்களாக வீடு திரும்பவில்லை.

காணாமல் போன இரு மீனவர்களும் அட்டாளைச்சேனை கப்பலடி கடற் பகுதியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை (09) பிற்பகல் நான்கு மணியளவில் மீன்பிடித் தொழில் நிமித்தம் ஆழ்கடலுக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு வெள்ளிக்கிழமை மாலை கடலுக்குச் சென்றவர்கள் மறுநாள் சனிக்கிமை காலை வேளையில் இருப்பிடம் நோக்கி திரும்பியிருக்க வேண்டும்.

ஒரு இரவுப் பொழுதில் மட்டும் ஆழ்கடலில் தரித்து நின்று மீன்பிடித் தொழில் ஈடுபட்டு வருவதனை வழமையாக்கிக் கொண்ட இவர்கள், ஒரு நாளுக்குப் போதுமான எரிபொருள், குடிநீர் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற வற்றை கொண்டு சென்றுள்ளதாக இவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்பகுதியில் பலத்த காற்று வீசி வருவதனால் இவர்களின் படகு காற்றில் அள்ளுண்டு செல்லப்பட்டிருக்கக் கூடும் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களைத் தேடும் பணியில் கடற்தொழில் அமைச்சு உத்தியோகத்தர்கள், கடற் படையினர், மீனவர்கள் மற்றும் துறைசார்ந்தோர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தினைச் சேர்ந்த ஜவாஹிர் முகம்மட் றிஸ்வி என்பவருக்குச் சொந்தமான படகில் பயணித்துக் காணாமல் போன இருவரும் அட்டாளைச்சேனை மற்றும் மூதூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை-07 ஆம் பிரிவினை வசிப்பிடமாகக் கொண்ட 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை அப்துல் றசீட் றிஸ்வான் என்பவரும், வாழைச்சேனையினைப் பிறப்படமாகவும், மூதூர் பிரதேசத்தினை வசிப்படமாகவும் கொண்ட 39 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான அப்துல் காசிம் முனவ்வர் என்பவரும் கடற்றொழிலுக்காகச் சென்று காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் புதிய அதிபராக நியமனம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் புதிய அதிபராக திருமதி பாலபாரதி ஸ்ரீதரன் நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இவர் அதிபராக பணியாற்றியிருந்தார்.

இவரது பதவிக்காலத்தில் இக்கல்லூரி உயர்நிலையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கல்முனை பாடசாலைகளுக்கு நீதி அமைச்சர் நிதி ஒதுக்கீடு!

[எஸ்.அஷ்ரப்கான்]

கல்முனை அல் - பஹ்றியா மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) மற்றும் அல் ஸுகறா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு நீதி அமைச்சர் அலி சப்றி அவர்களினால் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பாடசாலைகளுக்கு தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன கொள்முதல் செய்யப்படுவதுடன் உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட ஏற்பாடாகியுள்ளது.

இந்நிதி ஒதுக்கீடானது முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் பெஷ்டர் ஏ.எம்.றியாஸ் நீதி அமைச்சர் அலி ஸப்ரியிடம் வேண்டிக் கொண்டமைக்கு அமைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் வழங்கி வைப்பு!

[பைஷல் இஸ்மாயில்]

சம்மாந்துறை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்களுடன் கணினி உள்ளிட்ட வைத்தியசாலைக்கு தேவையான பல உபகரணங்களை கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் திருமதி எம்.எஸ்.றிஸ்க்காவிடம் கையளித்து வைத்தார்.

இதன்போது, வைத்தியசாலையில் நிலவிவரும் குறைபாடுகள் தொடர்பான விடயங்கள் பற்றிய தகவல்களை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் திருமதி எம்.எஸ்.றிஸ்க்காவிடம் கேட்டறிந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் டொக்டர் எம்.ஏ.நபீல், வைத்தியர்களான ஏ.எல்.நஸ்றின் ஜஹான், எம்.ரீ.சாக்கிரா பானு, சுதேச மருத்துவ திணைக்கள கணக்காளர் என்.பாலநந்தன், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி சி.ரி.நிர்மலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

லக்கி விளையாட்டுக் கழகத்தின் கடின பந்து கிரிக்கெட் அணிக்கான புதிய சீருடை அறிமுகம்

[பைஷல் இஸ்மாயில்]

லக்கி விளையாட்டுக் கழகத்தின் கடின பந்து கிரிக்கெட் அணிக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு (11) அட்டாளைச்சேனை பரா சொப்பிங் மண்டபத்தில் இடம்பெற்றது.

லக்கி விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம். அறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல். நியாஸ், மக்கள் காங்கிரஸ் ஒலுவில் அமைப்பாளர் எம்.ஜே.எம்.அஸ்ஹர், லக்கி விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஏ.எச்எம்.கியாஸ் ஆசிரியர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் புதிய சீருடைகளை அறிமுகம் செய்து வைத்ததுடன் லக்கி விளையாட்டுக்கழகத்தின் சகல வீரர்களுக்கும் புதிய சீருடையை வழங்கி வைத்தார்.

கொரோனா தொற்றாளர்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களால் சிரமதான பணி

[ஏ.எல்.எம்.ஷினாஸ்]

அம்பாரை மாவட்டத்தின் பாலமுனை ஊழஎனை-19 கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் சிரமதான பணி நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அடையாளம் காணப்பட்ட வைத்தியசாலையை அண்டிய பகுதிகள் சிரமதானம் செய்யப்பட்டதுடன் வைத்தியசாலை கட்டடத்தின் உள்ளக பகுதிகளும் துப்பரவு செய்யப்பட்டன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த சமூகப்பணியை மக்கள் வரவேற்றுள்ளதுடன் தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று தொற்றாளர்களாக அனுமதிக்கப்பட்ட இவர்கள் மிக விரைவில் குணமடைந்து தமது வீடுகளுக்கு செல்ல வேண்டும் என்றும் மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சி திட்டம் சம்மாந்துறையில் ஆரம்பம்!!

[ஐ.எல்.எம் நாஸிம்]

அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களது நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ஷ, அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.ஜே.லத்தீப், சம்மாந்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் , கணக்காளர் ஐ.எம். பாரிஸ், மற்றும் உற்பத்தியாளர்கள் என குறிப்பிட்ட அளவானோர் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் பங்களிப்பாக சுமார் 7 மில்லியன் ரூபா நிதி மற்றும் உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக சுமார் 5 மில்லியன் ரூபா நிதி ஆக மொத்தம் 12 மில்லியன் ரூபா பெறுமதியானதும் 110 பயனாளிகளை கொண்டதுமான கைத்தறி மற்றும் தையல் உற்பத்திச் செயற்பாடுகளை உள்ளடக்கிய இந்த உற்பத்திக் கிராம செயற்திட்டமானது அதன் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு மிகவும் கோலாகலமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சுய தொழில் முயற்சியாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் குறைகளை அதிதிகள் செவிமடுத்ததுடன் அவற்றை எவ்வாறு எதிர்காலத்தில் நிவர்த்திப்பது மற்றும் குறைகளை நிவர்த்திப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக பிரதம அதிதிகளான அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

இதன்போது பிரதேசத்தைச் சேர்ந்த கைத்தறி மற்றும் தையல் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றினை அதிதிகள் பார்வையிடிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் உருவாக்கபட்ட கல்விக்குழுவின் மூலம் இம்முறை உயர்தர பரீட்சைக்கு தோற்றும் கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான பரீட்சைகளை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பித்து ஆரம்பித்து. வைக்கப்பட்டத்து. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

[நூருள் ஹுதா உமர்]